சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 09–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–5வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர் இல்லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சந்திரமோகன் | மாவட்டம் | : | |
| த/பெ.பெயர் | : | குப்புசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**முதல் விசாரணை:**

1. நான் ஈரோடு சொக்கலிங்கம்பிள்ளை வீதியில் வசித்து வருகிறேன். தற்போது சொக்கலிங்கம் வீதி என்று மாற்றப்பட்டுள்ளது. கடந்த 18.06.2014 அன்று காலை 5.45 மணி அளவில் வாசுதேவன் வீட்டிற்கு சென்ற அவர் மகன் இறப்பு சம்மந்தமாக துக்கம் விசாரிக்க சென்றேன். அப்போது ஈரோடு வடக்கு காவல் நிலையத்தில் இருந்து போலீஸ்சார் அங்கு வந்திருந்தார்கள். மேலும் என்னிடமும், லோகநாதனிடமும் சாட்சிகளாக இருக்க சொல்லி கேட்டுக்கொண்டார்கள். அதன் பின்னிட்டு அருண்ராமின் அறைக்கு சென்று மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் என் முன்னிலையிலும் மற்றும் லோகநாதன் முன்னிலையிலும் தயார் செய்தனர்.

2. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அந்த பார்வை மகஜர் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது லோகநாதன் இறந்துவிட்டார். மேலும் என் முன்னிலையிலும் மற்றும் லோகநாதன் முன்னிலையிலும் தற்போது என்னிடம் காட்டப்படும் பாலிஷ்டர் வேஷ்டியை போலீஸ்சார் கைபற்று மகஜர் மூலம் கைபற்றினார்கள். மேலும் கைபற்று மகஜரில் நான் கையொப்பமிட்ட பிறகு என் முன்னிலையில் லோகநாதன் பார்வை மகஜர்

மற்றும் கைபற்று மகஜரில் கையொப்பமிட்டார். அந்த கைபற்று மகஜர். அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:—**

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்களை அழைத்து அவர்கள் ஆஜர் ஆகவில்லை என்பதால் எனவே குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்ற காரணத்தினால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது